தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சென்னை கிழக்கு மாவட்டம்

பகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன், எம்.பி. அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு **சென்னை கிழக்கு** மாவட்டத்திற்குட்பட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் பகுதி, அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

கொளத்தூர் கிழக்கு பகுதி

அமைப்பாளர் - கோ. பாலகுமார் எண். 512, திரு.வி.க. நகர், 15வது தெரு, செம்பியம், சென்னை - 600011.

துணை அமைப்பாளர்கள் - 1) ம. கோபிநாத் (எ) வினோத் எண். 14, கௌதமர் தெரு, ரமணா நகர், பெரம்பூர், சென்னை - 600011. 2) சி. மதன்குமார் எண். 5, லட்சுமி நகர் 3வது தெரு, பெரம்பூர், சென்னை - 600011. 3) ஏ. தமிழ்செல்வம் எண். 14/15, ஜெய் பீம் நகர், 2வது தெரு, பெரம்பூர், சென்னை - 600011. 4) ர. பிரவீன் எண். 31/2, தேவகியம்மாள் தெரு, பெரம்பூர், சென்னை - 600082. 5) க. நட்ராஜ் எண். 51/1ஏ, சாந்தி நகர், முதல் தெரு, பெரம்பூர், சென்னை - 600011. 6) கு. ஜெகன் எண். 17, வசந்தா கார்டன் 2வது தெரு, அயனாவரம், சென்னை - 600023. 7) தே. முருகன் எண். 11, காமராஜ் நகர், 2வது தெரு, சென்னை - 600082. 8) மா. ஹேம்நாத் எண். 72, பொன்னுசாமி நகர், 2வது தெரு, பெரம்பூர், சென்னை - 600011.

கொளத்தூர் மேற்கு பகுதி

அமைப்பாளர் - அ. மோகன்சுந்தர் எண். 1771/பி, 8வது காரனால் ஸ்ரீதரன் தெரு, ஜி.கே.எம். காலனி, 'சென்னை - 600082.

துணை அமைப்பாளர்கள் - 1) ரோஹித்பாபு எண். 58/1, யுனைடெட் காலனி 4வது தெரு, கொளத்தூர், சென்னை - 600099. 2) வே. முகேஷ் எண். 27/8, வடக்கு மாட வீதி, கொளத்தூர், சென்னை - 600099. 3) க. ரஞ்சித்குமார் எண். 98, கங்கையம்மன் கோவில் தெரு, எம்.ஜி.ஆர். நகர், கொளத்தூர், சென்னை - 600099. 4) மு. சர்வின்நந்தா எண். 17/10, கண்ணபிரான் கோவில் தெரு, அகரம், சென்னை - 600082. 5) மு. சரவணன் எண். 41, விநாயகர் கோயில் தெரு, அன்னை சத்யா நகர், கொளத்தூர், சென்னை - 600082. 6) நா. பிரசாந்த் எண். 31/10, ரங்கசாமி தெரு, பெரம்பூர், சென்னை - 600011. 7) கெ. முருகன் எண். 9/சி, திருப்புகழி நகர், துர்கா காலனி, கொளத்தூர், சென்னை - 600099. 8) மு. முத்து எண். 16, 2வது பாரதியார் தெரு, ஜி.கே.எம். காலனி, சென்னை - 600082.

துறைமுகம் கிழக்கு பகுதி

அமைப்பாளர் - ஜா. பென்னி எண். 151, அம்மன் கோயில் தெரு, ஏழுக்கிணறு, சென்னை - 600001.

துணை அமைப்பாளர்கள் - 1) ச. குகன் எண். 23, 9வது தெரு, ஆசிர்வாதபுரம், பிராட்வே சென்னை - 600001. 2) க.பா. பாபுகுமார் எண். 86/95, சண்முகராயன் தெரு, ஏழுக்கிணறு, சென்னை - 600001. 3) ர. தியாகராஜன் எண். 12/2, கிரிகோரி தெரு, ஏழுக்கிணறு, சென்னை - 600001. 4) கி. ஸ்டீபன் எண். 349, அன்னை சத்தியா நகர், பி-பகுதி, ராஜாஜி சாலை, சென்னை - 600001. 5) பி. பிரிட்டோ எண். 44, ஆசீர்வாதபுரம் 11வது தெரு, பிராட்வே, சென்னை - 600001. 6) சோ. உதயசூரியன் எண். 37, 5/இ- பிளாக், வடக்கு கடற்கரை சாலை, 4வது தெரு, சென்னை - 600001.

துறைமுகம் மேற்கு பகுதி

அமைப்பாளர் - ஜ. விக்னேஸ்வரன் எண். 26/72, திருப்பள்ளி தெரு, சௌகார்பேட்டை, சென்னை - 600001.

துணை அமைப்பாளர்கள் - 1) வே. கோகுலகிருஷ்ணன் எண். 32/33, பெருமாள்கோவில் தோட்டம், 4வது தெரு, சௌகார்பேட்டை, சென்னை - 600001. 2) எம்.ஆர். ராஜேஷ் எண். 48, பெருமாள் கோவில் தெரு, 5வது லேன், கொண்டித் தோப்பு, சென்னை - 600079. 3) மோ. ராஜேஷ் எண். 1/1, சுந்தர முதலி 4வது சந்து, கொண்டித்தோப்பு, சென்னை - 600001. 4) ஆ. அஜித்குமார் எண். 104, 4வது தெரு, கல்யாணபுரம், வால்டாக்ஸ் சாலை, யானைகவுனி, சென்னை - 600001. 5) வே. ஜெயபிரகாஷ் எண். 27, எஸ்.எம். நகர், பல்லவன் சாலை, அண்ணா சாலை, சென்னை - 600002. 6) லோ. ராஜேஷ் எண்.10, மெயின் தெரு, கல்யாணபுரம், யானைக்கவுனி, சென்னை - 600001. 7) மா. வினோதகன் எண். 2/ஏ, நயினியப்பன் நாயக்கன் தெரு, பூங்கா நகர், சென்னை - 600003. 8) கு. பிரேம்குமார் எண். 140, பி-பிளாக், காந்தி நகர், அண்ணா சாலை, சென்னை - 600002. 9) கே. பிரபாகரன் எண். 28, ராமகிருஷ்ணன் தெரு, சென்னை - 600001.

திரு.வி.க. நகர் வடக்கு பகுதி

அமைப்பாளர் - ர. மனோஜ்குமார் எண். 30/28, குளக்கரை சாலை, பிரிஸ்லி நகர், ஓட்டேரி, சென்னை - 600012.

துணை அமைப்பாளர்கள் - 1) ப. சூர்யா எண். 163, எப்-பிளாக், பி.எஸ். மூர்த்தி நகர், டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலை, சென்னை - 600012. 2) மு. மாரியப்பன் எண். 48, 3வது தெரு, பிரிசிலி நகர் 3வது தெரு, ஓட்டேரி, சென்னை - 600012. 3) நா. நரேஷ் எண். 227, எம்.எஸ். முத்து நகர், கன்னிகாபுரம், பெரம்பூர் பேரக்ஸ், சென்னை - 600012. 4) இ. ரமீஸ்ராஜா ரஹ்மான் எண். 109, கஸ்தூரிபாய் காலனி, ஏ-பிளாக், கன்னிகாபுரம் பெரம்பூர் பேரக்ஸ், சென்னை - 600011. 5) க. ஸ்டாலின் எண். 242, தாஸ் நகர் 6வது தெரு, கன்னிகாபுரம், சென்னை - 600012. 6) நி. கணேஷ்குமார் எண். 59, சந்திரயோகி சமாதி சாலை, பெரம்பூர், சென்னை - 600012. 7) இ. சாமுவேல் சந்தோஷ்குமார் எண். 4/7, ஆதிசேஷா நகர் 2வது தெரு, பெரம்பூர், சென்னை - 600012. 8) தே. குகன் எண். 1, ஏகாங்கிபுரம், மெயின் தெரு, அயனாவரம், சென்னை - 600023.

திரு.வி.க. நகர் தெற்கு பகுதி

அமைப்பாளர் - மு. தர்மராஜ் எண். 248/3, பி- பிளாக், சிவசண்முகபுரம், ஓட்டேரி, சென்னை - 600012.

துணை அமைப்பாளர்கள் - 1) அ. குணசேகரன் எண். 38/ஏ, டி-பிளாக், பின்புறம் எஸ்.வி.எம். நகர், ஓட்டேரி, சென்னை - 600012. 2) தே. அருண்ராஜ் எண். 24, கே. சத்யவாணிமுத்து நகர், ஓட்டேரி, சென்னை - 600012. 3) வே. சங்கர் எண். 14, பராக்கா சாலை, 2வது தெரு, நம்மாழ்வார்பேட்டை, சென்னை - 600012. 4) ச. மதன்குமார் எண். 4/22, நாராயண மேஸ்திரி 2வது தெரு, ஓட்டேரி, சென்னை - 600012. 5) சு. வினோத் எண். 10/19, அனுமந்தராயன் கோவில் தெரு, ஓட்டேரி, சென்னை - 600012. 6) க. சச்சின் எண். 115, பேடிசன்புரம், புளியந்தோப்பு, சென்னை - 600012. 7) செ. விக்ரமன் எண். 200, 7வது தெரு, எஸ்.எஸ்.புரம்., பி-பிளாக், புரசைவாக்கம், சென்னை - 600007. 8) ம. ராஜேஷ்குமார் எண். 34, அங்காளம்மன் கோவில் 2வது தெரு, ஜெய் நகர், சென்னை - 600012. 9) ஆர். ராகேஷ் எண். 16/28, பாரக்கா சாலை, 2வது தெரு, பஜனை கோவில் லேன், நம்மாழ்வார்பேட்டை, சென்னை - 600012.

எழும்பூர் வடக்கு பகுதி

அமைப்பாளர் - ர. ராமச்சந்திரன் (எ) சந்தோஷ் எண். 65, சி-பிளாக், நேரு பார்க் எழும்பூர், சென்னை - 600008.

துணை அமைப்பாளர்கள் - 1) சு. பாலமுருகன் எண். 6/39, பார்த்தசாரதி தெரு, புரசைவாக்கம் சென்னை - 600007. 2) கி. சத்தியநாராயணன் எண். 7/1, முத்தநாயக்கன், பெருமாள்பேட்டை, சென்னை - 600007.

3) சு. முஹம்மது லத்தீப் எண். 370, 13வது பிளாக், பி.கே. காலனி, புளியந்தோப்பு, சென்னை - 600112. 4) ஜோ. கிடியோன் எண். 20, சதாசிவம் தெரு, புரசைவாக்கம், வேப்பேரி, சென்னை - 600007. 5) கி. நவீன்குமார் எண். 26/38, ராகவா தெரு, சூளை, சென்னை - 600112. 6) ரா. பாரத் எண். 44/1, சின்னத்தம்பி தெரு, புரசைவாக்கம், சென்னை - 600012. 7) ந. லஷ்மன் எண். 19/2, ஆனந்தகிருஷ்ணன் தெரு, சூளை, சென்னை - 600112. 8) ந. உதயகுமார் எண். 141/61, கந்தசாமி கோவில் தெரு, கொசப்பேட்டை,பெரம்பூர் பேரக்ஸ், சென்னை - 600012.

எழும்பூர் தெற்கு பகுதி

அமைப்பாளர் - ரா. கோபி எண். 5/3, ஷேக் அலி சுவேதார் தெரு, பெரியமேடு, சென்னை - 600003.

துணை அமைப்பாளர்கள் - 1) யோ. வினோத்குமார் எண். 23/3, சாமி தெரு, எழும்பூர், சென்னை - 600008. 2) கா. மீனாட்சிசுந்தரம் எண். 8/9, நோவல் மருத்துவமனை 3வது தெரு, பெரியமேடு, சென்னை - 600011.

3) ப. அணில்குமார் ரங்கா, எண். 26, ஹண்ட்ரஸ் சாலை, சூளை, சென்னை - 600112. 4) மு. குமார் எண். 12/32, வேலாயுதம் 3வது தெரு, புதுப்பேட்டை, சென்னை - 600002. 5) வே. குமரன் எண். 12/2, கோபால் தெரு, சூளை, சென்னை - 600112. 6) ப. ஜெயகாந்த் எண். 23/11, பிருந்தாவனம் 2வது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600031. 7) கு. தமிழ்அன்பு 3/1, வடக்கு பிருந்தவன் 5வது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600031.

வில்லிவாக்கம் மேற்கு பகுதி

அமைப்பாளர் - சு. இன்பநாதன் எண். 10/21ஏ, வடக்கு ஹைகோர்ட் காலனி, வில்லிவாக்கம், சென்னை - 600049.

துணை அமைப்பாளர்கள் - 1) சி. கார்த்திக் எண். 32/1, பெண்ணங்கிணறு தெரு, வில்லிவாக்கம், சென்னை - 600049. 2) சா. மணிகண்டன் எண். 27, அன்னை சத்தியா நகர் 1வது தெரு, வில்லிவாக்கம், சென்னை - 600049. 3) து. கார்த்திக் எண். 38, பி-பிளாக், 24வது அகத்தியர் நகர், வில்லிவாக்கம், சென்னை - 600049. 4) ர. பாபு எண். 6/27, ஏ-வகை, 86வது தெரு, சிட்கோ நகர், வில்லிவாக்கம், சென்னை . 600049. 5) ப. பழனியப்பன் எண். 5/142, ஏ-வகை, 66வது தெரு, சிட்கோ நகர், வில்லிவாக்கம், சென்னை - 600049. 6) சு. சுதாகர் எண். 5/142, பி- வகை, 8வது மெயின் ரோடு, சிட்கோ நகர், வில்லிவாக்கம், சென்னை - 600049.

வில்லிவாக்கம் கிழக்கு பகுதி

அமைப்பாளர் - ரா. கோபி எண். 75/1431, லாக்மா தெரு, அயனாவரம், மேடவாக்கம், சென்னை - 600010.

துணை அமைப்பாளர்கள் - 1) ம. சந்தோஷ்குமார் எண். 8/13, புது தெரு, 5வது சந்து, அயனாவரம், சென்னை - 600023. 2) ஹெ. ஹில்மன் எண். 41/18, குட்டியப்பன் தெரு, கீழ்பாக்கம், சென்னை - 600010. 3) கே. ஏழுமலை எண். 145, என்.எம்.கே. தெரு, அயனாவரம், சென்னை- 600023. 4) ரா. சுரேந்தர் எண். 81, பி- பிளாக், பெரியார் சாலை, அயனாவரம், சென்னை - 600023. 5) மு. ஸ்ரீதர் எண். 86, சோலை மெயின் தெரு, அயனாவரம், சென்னை - 600023. 6) ரா. ஹரிகிருஷ்ணன் எண். 11/92, சன்னியாசிபுரம் 1வது தெரு, மேடவாக்கம் டேங்க் ரோடு, கீழ்பாக்கம், சென்னை - 600010. 7) ரா. லோகநாதன் எண். 239, கே.எச்.சாலை, அயனாவரம் , சென்னை - 600023. 8) ஜோ. ஜீவன்தாஸ்ஜோஷ்வா எண். 43/பி, முனுசாமி தெரு, அயனாவரம், சென்னை - 600023.

அம்பத்தூர் தெற்கு பகுதி

அமைப்பாளர் - ப. செந்தில் எண். 36/70, பெரியார் நகர் பாடி குப்பம் சாலை, சென்னை - 600040.

துணை அமைப்பாளர்கள் - 1) ச. ராஜ்கமல் எண். 13/15, வண்டியம்மன் கோவில் தெரு, படிக்குப்பம், சென்னை - 600107. 2) ரா. பாலாஜி எண். 122, ஜவகர் தெரு, டி.வி.எஸ். மெயின் ரோடு, தேவர் நகர், சென்னை - 600050. 3) செ. விஜய் எண். 19/6, ரவுண்டு பில்டிங் அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், சென்னை - 600101. 4) மா. ஜீவா எண். 58, பஜனை கோவில் தெரு, பாடி, சென்னை - 600050. 5) மா. ராஜேஷ் எண். 16, காமராஜர் 1வது குறுக்குச் சாலை, சீனிவாச நகர், பாடி, சென்னை - 600050. 6) பீ. மணிகண்டன் எண். 1/80, பஜனை கோயில் தெரு, பாடி, சென்னை - 600050. 7) க. சதீஷ் குமார் எண். 35/19, 7வது தெரு, பாடி புது நகர், அண்ணா நகர் மேற்கு விரிவு, சென்னை - 600101.

அம்பத்தூர் கிழக்கு பகுதி

அமைப்பாளர் - ர. வசந்தம் கார்த்திகேயன் எண். 41/சி, நேதாஜி நகர், மதனக்குப்பம், கொளத்தூர், சென்னை - 600099.

துணை அமைப்பாளர்கள் - 1) த. கண்ணன் எண். 59, முனுசாமி கோவில் 4வது தெரு, மேனாம்பேடு, அம்பத்தூர், சென்னை - 600053. 2) கி. சரவணன் எண். 6/7, பிரிதிவாக்கம் மெயின் ரோடு, அம்பத்தூர், சென்னை - 600053. 3) வே. விக்னேஸ்வர் எண். 42/54, சிவலிங்கபுரம், கொரட்டூர், சென்னை - 600076. 4) ம. விக்னேஷ் எண். 9/48, ஆண்டாள் கோவில் தெரு, மதனக்குப்பம், சென்னை - 600099. 5) ஆர். ஜான்ஆன்ட் எண். 5/24, லட்சுமணன் முதல் 3வது தெரு, கொரட்டூர், சென்னை - 600080. 6) ப. பாபு எண். 15, மாரியம்மன் கோவில் தெரு, பட்டரவாக்கம், அம்பத்தூர், சென்னை - 600053.

அம்பத்தூர் வடக்கு பகுதி

அமைப்பாளர் - மு. சிவவேல் எண். 11/3, கலவை தெரு, டீச்சர் காலனி, அம்பத்தூர், சென்னை - 600053.

துணை அமைப்பாளர்கள் - 1) செ. சீனிவாசன் எண். 9, பஜனை கோயில் குறுக்கு தெரு, கல்யாணபுரம், அம்பத்தூர், சென்னை - 600053. 2) ர. விஜய் எண். 6/28, வெங்கடாசலம் தெரு, சோழபுரம், அம்பத்தூர், சென்னை - 600053. 3) சு. ஆறுமுகம் எண். 5/68, 18வது அவென்யூ, பானு நகர் புதூர், அம்பத்தூர், சென்னை - 600053. 4) த. ராம்குமார் எண். 13, எஸ்-1, சாய் சைதன்யா அப்பார்ட்மெண்ட்ஸ், செங்கல்வராயன் தெரு, காந்தி நகர், அம்பத்தூர், சென்னை - 600053. 5) நா. அபராஹம் எண். 9/47, 2வது மெயின் ரோடு, லெனின் நகர், அம்பத்தூர், சென்னை - 600053. 6) ஜ. மணிவண்ணன் எண். 13, இந்திரா நகர் 1வது தெரு, அம்பத்தூர், சென்னை - 600053. 7) க. பாலசுப்ரமணியம் 33வது, அவென்யூ, பானு நகர், புதூர், அம்பத்தூர், சென்னை - 600053. 8) க. விக்னேஷ் எண். 10, அழகிரி சாமி தெரு, விஜயலட்சுமிபுரம், அம்பத்தூர், சென்னை - 600053.

"அண்ணா அறிவாலயம்" சென்னை - 18
நாள்- 10-04-2025.

தயாநிதி மாறன், எம்.பி.,
செயலாளர்,
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

திருவள்ளூர் மத்திய மாவட்டம், திருமழிசை பேரூர் கழக சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் பேரூர் கழக செயலாளர் தி.வே.முனுசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு வருகின்ற 18 தேதி அன்று கழக தலைவர் திருவள்ளூர் மாவட்டத்திற்கு வருகை தருவது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், பேரூராட்சி சேர்மன், ஜெ.மகாதேவன், சி.ஜெ.சீனிவாசன், காயத்ரி ஸ்ரீதர், ப.நரேஷ்குமார், எஸ்.சங்கர், வி.எம். நாகதாஸ், தி.கோ.செல்வம், வேந்தன் பார்வதி, அருள், மு.சுரேந்தர் எம்.சங்கர், பார்த்திபன், ஜெ.சண்முகம், க.கங்காதரன், மற்றும் வட்டக் கழக செயலாளர் கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடுகள் சட்ட விரோதமானது என உச்ச நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!

பல்கலைக் கழக வேந்தராக பொறுப்பேற்கும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு!

ஆதித்தமிழர் பேரவை – இரா.அதியமான் அறிக்கை!

சென்னை, ஏப். 11-

ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் இரா. அதியமான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

"சிறந்ததொரு அரசமைப்புச் சட்டத்தை நல்ல முறையில் நடைமுறைப்படுத்துவதே ஆகச்சிறந்ததாகும் இல்லையென்றால் அது தவறாக ஆகிவிடும்" என்ற சட்டமேதை அம்பேத்கர் அவர்களின் வரிகளை மேற்கோள் காட்டி ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடுகள் முற்றிலும் சட்டவிரோதமானது என

ஒன்றிய அரசுக்கும் ஆளுநருக்கும் சாட்டையால் அடிக்கப்பட்டது போல் உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள இந்த வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை ஆதித்தமிழர் பேரவை பாராட்டி வரவேற்கிறது.

ஒன்றிய பாசக அரசின் கைப்பாவையாகவும் RSS யின் அடிவருடியாகவும் வலம் வரும் ஆர்.என்.ரவி ஆளுநராக பொறுப்பேற்ற திலிருந்து மக்களால் தேர்ந்தெடுத்த அரசின் மீது அனாவசிய மோதல் போக்கை உருவாக்கி தனக்குத் தானே உக்கிரமாக்கிக்கொண்டு பல மசோதாக்களுக்கும் சட்ட முன்வடிவுகளுக்கும் ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்துவது சட்டப் பேரவைக்கு திருப்பி அனுப்புவது கையெழுத்திடாமல் ஜனாதிபதிக்கு அனுப்புவது என சட்ட விரோதமாகவே செயல்பட்டு வந்தார்.

ஆளுநரின் இந்த சட்டவிரோத செயலுக்கு எதிராக தமிழக அரசு தொடர்ந்த வழக்கில் ஆளுநரின் இந்த அடாவடிதனத்திற்கு உச்ச நீதிமன்றம் சம்மட்டி அடி கொடுத்திருக்கிறது.

உச்ச நீதிமன்றம் வழங்கியிருக்கும் இந்த தீர்ப்பின் மூலம் மாநிலங்களின் சுயாட்சி உரிமையை மீண்டும் உறுதிபடுத்தி தந்திருக்கிறது நமது திராவிட மாடல் அரசு தமிழ்நாடு அரசு.

ஆளுநர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு கட்டுப்பட்டவர், தன்னிச்சையாக செயல்படக் கூடாது. ஆளுநருக்கு தனி விருப்புரிமை இருக்கக் கூடாது என்று சுட்டிக்காட்டி, ஜனாதிபதியின் பரிசீலனைக்காக பல்கலைக்கழக 10 மசோதாவை ஆளுநர் நிறுத்தி வைத்தது சட்ட விரோதமானது.

சட்டப்படி தவறு என்றும் ஆளுநர் செயல்பட்ட அனைத்து நடவடிக்கைகள் சட்ட விரோதமானது என அனைத்து மாநிலங்களும் பயன்பெறும் வகையில் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியிருப்பதோடு ஆளுநர் மீதும் ஒன்றிய அரசின் மீது அனைத்து கட்சியினரும் வைக்கப்பட்டுள்ள விமர்சனங்கள் சரியானது நியாயமானது என்று நிருபிக்கப்பட்டிருக்கிறது.

இந்த தீர்ப்பின் மூலம் இந்த 10 மசோதாக்களும் நடைமுறைக்கு வருவதோடு இதில் நாம் எதிர்பார்க்கும் முக்கிய மசோதாவான தமிழ்நாடு பல்கலைகழக சட்ட திருத்த மசோதா 2022 மூலம் பல்கலைக்கழக வேந்தர் பொறுப்பிலிருந்து நச்சை பரப்பிய ஆர்.என்.ரவி என்ற ஆளுநருக்கு விடுவிப்பு தரப்பட்டு வேந்தராக செயல்பட முதல்வருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருப்பதற்கு ஆதித்தமிழர் பேரவை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு தொடர்ந்து போராடும்..! தொடர்ந்து வெற்றிபெறும்.!!

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் இருந்து 6 அதி நவீன அரசுப் பேருந்துகள்!

ஆறு வழித்தடத்தில் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

காஞ்சிபுரம், ஏப். 11 -

தமிழ்நாட்டில் அரசு பேருந்துகளை பயன்படுத்தும் பொதுமக்கள் பாதுகாப்பான வகையில் பயணம் மேற்கொள்வதற்கு வசதியாக தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் அதி நவீன பேருந்துகளை உருவாக்கி இயக்கும் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்துள்ளார். அந்த வகையில் அதி நவீன பாதுகாப்பு வசதிகளுடன் உருவாக்கப்பட்ட பேருந்துகளை மாவட்டம் தோறும் அரசு போக்குவரத்துக் கழக பணிமனைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

கோவில் நகரம் பட்டு நகரம் சுற்றுலா நகரம் என பெயர் பெற்று விளங்கும் காஞ்சிபுரம் மாநகரத்தில் இருந்து அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, மற்றும் வெளி மாவட்டங்களுக்கு அதிக அளவில் பயணிகள் வந்து செல்லும் நிலையில், பேருந்து பயணிகள் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்டுள்ள அதிநவீன பேருந்துகளை காஞ்சிபுரம் மாநகரத்திலிருந்து இயக்க ஒதுக்கீடு செய்ய வேண்டும் என காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி எம்எல்ஏ சி.வி.எம். பி எழிலரசன் போக்குவரத்து துறை அமைச்சரிடம் கோரிக்கை வைத்தார்.

காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி எம்எல்ஏ எழிலரசனின் கோரிக்கையை ஏற்று போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் ஆறு புதிய அதிநவீன பேருந்துகளை காஞ்சிபுரத்திலிருந்து இயக்க அனுமதி அளித்து ஒதுக்கீடு செய்தார். ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள புதிய பேருந்துகளில் பயணிகள் பாதுகாப்பிற்காக ஒவ்வொரு இருக்கையின் அருகில் சுவிட்ச் பொருத்தப்பட்டுள்ளது. பயணிகளுக்கு ஏதாவது குறைபாடு இருப்பின் இந்த சுவிட்சை அழுத்தினால் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் சென்று உடனடியாக நிவர்த்தி செய்யப்படும். பயணிகளிடம் பெறப்படும் குறைபாடு உடனே ஒட்டுனரால் தகவல் பெறப்பட்டு மைக்மூலம் பேசி நிவர்த்தி செய்வார்.

பேருந்து உட்புறம் பேருந்து நிறுத்தத்தை தெரிவிக்கும் வகையில் ஜிபிஎஸ் கருவி பொருத்தப்பட்டு எல் ஈடி வசதி பொருத்தப்பட்டுள்ளது. பேருந்தின் உள்ளே இரண்டு கேமரா பொருத்துவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. ஓட்டுனர் முன்புறம் உள்ள டிஸ்பிளே மூலம் பேருந்தை பின்புறம் எடுக்கும் போதும் கேமரா மூலம் பார்த்து பாதுகாப்பாக இயக்கலாம். படிக்கட்டில் சென்ஸார் பொருத்தப்பட்டுள்ளதால் பயணிகள் படியில் நின்றால் ஒலிபெருக்கி மூலம் எச்சரிக்கப்படும். பேருந்து வலது மற்றும் இடது புறம் திரும்பும் போது ரூட்போட்டு லைட் வலது, இடது குறியீட்டை காண்பிக்கும். வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது.

அந்த வகையில் நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட ஆறு பேருந்துகள் காஞ்சிபுரத்தில் இருந்து பெங்களூருக்கு இரண்டு பேருந்துகளும் சித்தாத்தூர், அக்கம்மாபுரம், மானாமதி பனப்பாக்கம் ஆகிய பகுதிகளுக்கு தலா ஒரு பேருந்தும் இயக்க தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் விழுப்புரம் கோட்டம் காஞ்சிபுரம் மண்டல நிர்வாகம் அனுமதி அளித்து உள்ளது.

இதனைத் தொடர்ந்து காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து ஆறு புதிய நவீன பேருந்துகளை துவக்கி வைக்கும் விழா நேற்று நடைபெற்ற விழாவில் காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி எம்எல்ஏ சி.வி. எம்.பி எழிலரசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேருந்து பயணிகள் பயன்பாட்டிற்காக 6 அதி நவீன புதிய பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இவ்விழாவில் அரசு போக்குவரத்துக் கழக காஞ்சிபுரம் மண்டல பொது மேலாளர் தட்சணாமூர்த்தி, மாவட்ட பொருளாளர் சன் பிராண்ட் கே ஆறுமுகம், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் மகாலட்சுமி யுவராஜ், மாநகராட்சி ஆணையர் நவேந்திரன், காஞ்சிபுரம் ஒன்றிய செயலாளர் பி.எம்.குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் யுவராஜ், பகுதி செயலாளர் சந்துரு,திலகர், வெங்கடேசன், திமுக நிர்வாகிகள் எம்.எஸ் பாலன், அரசு போக்குவரத்து கழகம் காஞ்சிபுரம் துணை மேலாளர் தொழில் நுட்பம் தட்சிணாமூர்த்தி,துணை மேலாளர் வணிகப்பிரிவு பொன்னு பாண்டி, தொமுச பொதுச் செயலாளர் ரவி, தலைவர் சுதாகர், பொருளாளர் ஆ.முரளி, அமைப்பு செயலாளர் டில்லி பாபு, துணை பொது செயலாளர் தினகரன், துணை செயலாளர்கள் ரவி, கிருஷ்ணமூர்த்தி மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பூண்டி கிழக்கு ஒன்றிய திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் டி.கே.சந்திரசேகர் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் வருகின்ற 18ஆம் தேதி அன்று திருவள்ளூர் மாவட்டத்திற்கு கழக தலைவர் வருகை தருவது குறித்து பல்வேறு ஆலோசனைகள் வழங்கினார். உடன் மு.பகலவன், சி.எச்.சேகர், ஜெ.மூர்த்தி, கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, பா.செ.குணசேகரன், வெங்கடாசலபதி, வெ.அன்புவாணன், ஜான்பொன்னுசாமி, சக்கரவர்த்தி, பாபு, பால்சுதாகர், சுரேஷ், வெங்கடதிரி, ஸ்ரீராம், குப்பன் சித்ராபாபு, தில்லை.குமார், சுமன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.